# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**C.C. 40-2024 Date : 04.10.2024 LW. 1/P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன் | ஆதார் எண் | |
| தகப்பனார் பெயர்; | மண்ணாங்கட்டி | வட்டம் | |
| ஜாதி | | தொழில் | சென்ட்டிரிங் |
| கிராமம் | பு.மாம்பாக்கம் | வயது | 31 |
| 1ம்எதிரி ஆஜர், 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions துof Act X of 1873.

முதல் விசாரணை....

நான் பு.மாம்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சென்ட்டிரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் மற்ற எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி வெங்கடேசன் என் அக்காவீட்டிற்கு எதிர்வீட்டுக்காரர். சிவலட்சுமி என் அக்கா. அக்கா வீட்டிற்கு 10 வீடு தள்ளி என் வீடு உள்ளது. 20.11.2023 காலை 07.00 மணியிருக்கும், பொதுநடைபாதையில் இருந்த முள்மரத்தை பொதுப்பாதையில் வளைந்ததால் என் அக்கா அதனை வெட்டினார். பின்பு அதற்கு எதிரி வெங்கடேசன், செந்தாமரை, கீதா மற்றும் ரம்யா ஆகியோர்கள் என் அக்கா சிவலட்சுமியின் முடியை இழுத்துபோட்டு அடித்துவிட்டு, களைவெட்டும் கம்பால் மற்றும் குச்சி தடியால் என் அக்காவை அடித்து உதைத்து, நெஞ்சு மார்பு ஆகிய பகுதிகளில் அடித்தார்கள். என் அக்காவின் ஜாக்கெட்டை வெங்கடேசன், செந்தாமரை, கீதா ஆகியோர்கள் அடித்து கிழித்தார்கள். எதிரிகள் நால்வரும் என் அக்காவை பார்த்து இனி நடைபாதையில் இடமில்லை என்று சொல்லி எதிரிகள் நால்வரும் சேர்ந்து அடித்ததால் என் அக்காவிற்கு இடது கன்னம் வீங்கிவிட்டது. என் அக்காமகன் தமிழ்செல்வன் காலை 8 மணிக்கு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தார். பின்னர் மேல்சிகிச்சைக்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்னர் எனக்கு தகவல் கிடைத்து உளுந்தூர்பேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையொப்பம்

என்னுடையது தான். அந்த **புகார் அ.சா.ஆ.1** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Judicial Magistrate-1,
Ulundurpet.